Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 94/2020 PW-1**

Name : எழில் (எ) எழிலரசன்
Father / Husband name : வடிவேல்
Village : திண்டிவனம்
Age : 43
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.01.2026

A1,A2, A3 present. Both side counsel present.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

என்னிடம் பிரச்சனை செய்து என்னை தாக்கிய நபர்கள் தற்போது ஆஜரிலிருக்கும் எதிரிகள் ஆவார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2017 ம் வருடம் நான் எங்கு வசித்தேன் என்றால் கிடங்கல் - 1 ல் ஈஸ்வரன் கோவில் தெருவில் வசித்தேன். நான் பெயிண்ட் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். கிடங்கல் - 1 ஏரிக்கரை பிள்ளையார் கோவில் அருகே ரேசன் கடை உள்ளது என்றால் சரிதான். அங்குள்ள ஆலமரத்தின் கீழ் பிள்ளையார் கோவில், அம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். கிடங்கல் - 1 பகுதியை சேர்ந்தவர்கள் அங்குள்ள கோவில்களுக்கு வருவார்கள் என்றால் சரிதான். கிடங்கல் - 1 ஏரிக்கரை வழி மார்க்கெட் செல்லும் பொதுவான வழி என்றால் சரிதான். எதிரிகளை எத்தனை வருடமாக தெரியும் என்றால் தெரியாது, சம்பவத்தின்போது தான் தெரியும். எதிரிகளின் பெயர், முகவரி, எங்கு வேலை செய்கிறார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். கிடங்கல் - 1 ரேசன் கடை, அங்குள்ள கோவில்களின் அருகே பசங்க விளையாடுவார்கள் என்றால் அதிகமாக விளையாடமாட்டார்கள்.

2. சம்பவயிடத்தில் வயதானவர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். எனது பூர்வீக முகவரி கிடங்கல் 2 என்றால் சரிதான். சுமார் 10 வருடமாக தான் கிடங்கல் 1 ல் வசிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று நான் வேலை செல்லவில்லை, அதனை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நண்பர் அன்வர் என்ன வேலை செய்கிறார் என்றால் மெக்கானிக் வேலை செய்கிறார். நானும் எனது நண்பரும் எதற்காக அங்கு சென்றோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு காலை 10, 11 மணியளவில் சென்றோமா என்றால் இல்லை, 12 மணி இருக்கும். எதற்காக அங்கு சென்றேன் என்றால் பாத்ரூம் சென்றுவிட்டு வரும்போது பிரச்சனை நடந்தது. 2வது எதிரி நிஜாமை ஏரிக்கரையில் ஆடுமேய்க்கும்போது பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

3. அன்றையதினம் நானும் அன்வரும் பாத்ரூம் சென்றபோது நான் என்ன வைத்திருந்தேன் என்றால் பாக்கெட்டில் ரூ.1000/- பணம் வைத்திருந்தேன். ரூ.1000/- பணம் எத்தனை ரூபாய் தாள்களாக வைத்திருந்தேன் என்றால் சில்லரையாக வைத்திருந்தேன், எத்தனை ரூபாய் தாள்கள் என்று நினைவில்லை. என்னுடன் வந்த அன்வரிடம் 1வது எதிரி பாக்கெட்டை பார்க்கவில்லை என்றால் சரிதான், என்னை மட்டும் தான் பார்த்தேன். எனக்கு மதுஅருந்தும் பழக்கம், பீடி பிடிக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எதிரி என்னிடம் மட்டும் தீப்பெட்டி கேட்டாரா அல்லது அன்வரிடமும் கேட்டாரா என்றால் என்னிடம் மட்டும் கேட்டார். பிரச்சனை நடக்கும்போது அன்வரும் உடனிருந்தார் என்றால் சரிதான். தீப்பெட்டி இல்லை என்று சொல்லிவிட்டு நான் அங்கேயே இருந்தேனா என்றால் இல்லை, சற்று தூரம் நடந்து சென்றேன். அப்போது கிடங்கல் பகுதியை சேர்ந்தவர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

4. எதிரிகள் என்னை மட்டும் அடித்தார்கள், அன்வரை அடிக்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி என்னை அடித்த கருங்கல்லை போலிசாரிடம்

காண்பித்தேனா என்றால் இல்லை. 2, 3 வது எதிரிகள் என்னை அடித்த தடியை காண்பித்து போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. பின்னர் நான் என்ன செய்தேன் என்றால் மயக்கமாக இருந்தது, நண்பர்களுக்கு போன் செய்து சொன்னேன், மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு யார் என்னை அழைத்துச்சென்றது என்றால் அன்வர் மற்றும் 2 நபர்கள். திண்டிவனம் மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். திண்டிவனம் மருத்துவமனையிலிருந்த போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை, என்னை உடனே முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள்.

5. எனது நண்பர்கள் எந்த மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் திண்டிவனம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். புகார் கொடுத்தபோது போலிசார் விசாரித்தார்கள், அதன்பின்னர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். அப்போது மருத்துவர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். அப்போது நான் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் சரிதான். எதிரிகள் 3 பேரும் எனக்கு 15 ஆண்டுகளாக நண்பர்கள் என்றால் இல்லை. நானும் எதிரிகளும் ஏரிக்கரை அருகே கேரம்போர்டு விளையாடுவோம் என்றால் சரியல்ல. அவ்வாறு விளையாடும்போது எங்களுக்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1வது எதிரியை நான் அடிக்க செல்லும்போது கால் தவறி கிழே விழுந்து மூக்கில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு நான் எதிரியை மருத்துவ செலவிற்காக பணம் கேட்டு மிரட்டினேன் என்றால் சரியல்ல. எதிரி பணம் கொடுக்க மறுத்ததால் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல.

6. மருத்துவமனையில் விசாரித்தபோது 1வது எதிரியின் மீது பொய்யான புகார்

கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதால் எழுதாத புகார் வாக்குமூலத்தில் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கத்தியைக்காட்டி மிரட்டவில்லை என்றால் சரியல்ல. பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.